# சுயஉதவிக் குழுக்கள் மீது வங்கிகள் நம்பிக்கை: ஸ்டாலின்

First Published : 09 Mar 2010 02:21:23 AM IST



**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில், சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அன்னை தெரசா சுய உதவிக் குழுவுக்கு ரூ.5 லட்சம் கடனுதவி வழங்கிய துணை முதல்வர்**

சென்னை, மார்ச் 8: சுய உதவிக் குழுக்கள் மீது வங்கிகள் வைத்துள்ள நம்பிக்கை தமிழகத்துக்குக் கிடைத்த பெருமை" என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

மேலும், சுய உதவிக் குழுக்களுக்கு தேசிய அளவில் வங்கிகள் வழங்கியுள்ள கடன் அளவில் 20 சதவீதம் தமிழக குழுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில், மகளிர் தினம் மற்றும் 656 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.8.2 கோடி கடன் உதவி வழங்கும் விழாக்கள் சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு தலைமை வகித்த துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், அனைத்துக் குழுக்களுக்கும் தானே நிதி உதவியை வழங்கினார். முன்னதாக, அவர் பேசியது:

""திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற போது, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட நேரு உள் விளையாட்டு அரங்கில் நின்று கடனை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி.

சுய உதவிக் குழுக்கள் எத்தனை இருந்தாலும், அனைத்துக்கும் நிதி உதவியை முழுமையாகத் தரக் கூடிய நிலையை இப்போது உருவாக்கி இருக்கிறோம். அரசு நிகழ்ச்சி என்றால், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் 10 நிமிடங்கள் வரை

உரையாற்றுவர். பின்னர், 100 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கத் திட்டமிட்டிருந்தால், 5 அல்லது 10 பேருக்கு அமைச்சர்கள் வழங்குவார்கள்.

மீதமுள்ளவற்றை அதிகாரிகள் கொடுப்பார்கள்; அப்படியும் இல்லாவிட்டால் பயனாளிகளின் வீடுகளுக்கோ, அல்லது பயனாளிகள் அரசு அலுவலகங்களுக்கோ சென்று நலத் திட்ட உதவிகளைப் பெறுவார்கள்.

இந்த நிலையை, சுய உதவிக் குழுக்களுக்கு நிதி வழங்கும் போது மாற்ற வேண்டும் என முடிவெடுத்தோம். அத்தனை குழுக்களுக்கும் நானே நிதி வழங்கி வருகிறேன்.

தருமபுரியில் தொடக்கம்: சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம், தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. விழாவில், பேசிய முதல்வர் கருணாநிதி, "கட்சி அல்லது அரசியல் வளர்ச்சிக்காக அல்லது தேர்தலில் வாக்குகளைப் பெற வேண்டும் என்று குறுகிய நோக்கத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி அளிக்கப்படவில்லை" என்றார்.

அன்று சிறிய அளவில் நடைபெற்ற குழுக்களின் செயல்பாடு, படிப்படியாக வளர்ந்து இன்று கம்பீரமாக மாபெரும் இயக்கமாக வளர்ந்து இருக்கிறது. சுய உதவிக் குழுக்களில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

20 சதவீத கடன்: தேசிய அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் அளவு ரூ.10,527.37 கோடியாகும். அதில், தமிழகத்துக்கு மட்டும் ரூ.2,174.57 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இது, தேசிய அளவில் கொடுக்கப்பட்ட மொத்த கடன் அளவில் 20 சதவீதம் ஆகும்.

இதற்குக் காரணம், தமிழகத்தைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும் பாங்கு தான். உங்கள் மீதுள்ள நம்பிக்கை காரணமாக வங்கிகள் கடனை அளிக்கின்றன.

இது, ஒட்டுமொத்த தமிழகத்துக்கே கிடைத்த பெருமை.தமிழக அரசுத் துறைகள் தங்களது கணக்கு வழக்குகளை பரிமாற்றங்களை ஐந்து வங்கிகளில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இடம்பெறவில்லை என்று வங்கி அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதுகுறித்து, பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உறுதி அளித்தார் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின்.நிகழ்ச்சியில், வங்கியின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் எஸ்.ஏ.பட், செயல் இயக்குநர்கள் நிபுர் மித்ரா, ஒய்.எல்.மதான், பொது மேலாளர் டி.தேனப்பன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**கூட்டுறவு அங்காடிகளில் துவரம் பருப்பு விலை குறைப்பு**

First Published : 09 Mar 2010 02:57:40 AM IST



சென்னை, மார்ச் 8: கூட்டுறவு அங்காடிகளில் துவரம் பருப்பின் விலையைக் குறைத்து விற்க உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை உத்தரவிட்டுள்ளது.

வெளிச்சந்தையில் மொத்த விலையில் துவரம் பருப்பின் விலை குறைந்தும் சில்லறையில் விலை குறையவில்லை என "தினமணி'யில் கடந்த ஜனவரி மாதம் செய்தி வெளியானது. இதைத் தொடர்ந்து கூட்டுறவு அங்காடிகள் மூலம் குறைந்த விலைக்கு துவரம் பருப்பு சில்லறைக்கு விற்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது.

அதைத் தொடர்ந்து 27.1.2010 முதல் தமிழகத்தில் கூட்டுறவு மொத்த பண்டக சாலைகள் நடத்தும் 200 கூட்டுறவு அங்காடிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் 21 அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் இவ்விரண்டும் இணைந்து நடத்தும் 295 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலம் துவரம் பருப்பு விற்பனை தொடங்கப்பட்டது. அப்போது, முதல் ரக துவரம் பருப்பு கிலோ ரூ. 65}க்கும், 2}ம் ரக துவரம் பருப்பு ரூ. 60}க்கும், கனடா துவரம் பருப்பு ரூ. 48}க்கும் விற்பனை செய்யப்பட்டது.

வெளிச்சந்தையில் துவரம் பருப்பு மொத்த விலை மீண்டும் குறைந்ததைத் தொடர்ந்து முறையே ரூ. 63, ரூ. 58, ரூ. 48}ஆக குறைத்து விற்கப்பட்டது. கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து முதல் ரக உளுத்தம் பருப்பு ரூ. 55, 2}ம் ரகம் ரூ. 53 என விற்கப்பட்டது.

**மீண்டும் விலை குறைப்பு:**

வெளிச்சந்தையில் இப்போது துவரம் பருப்பு மூட்டை ரூ. 6,000}க்கு விற்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் திங்கள்கிழமை (மார்ச் 8) முதல் துவரம் பருப்பு சில்லறை விலையை தமிழக அரசு மீண்டும் குறைத்துள்ளது. அதாவது முதல் ரக துவரம் பருப்பு கிலோ ரூ. 60, 2}ம் ரகம் ரூ. 55, கனடா துவரம் பருப்பு ரூ. 57, உளுத்தம் பருப்பு ரூ. 55, 2}ம் ரகம் ரூ. 53}க்கு விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உளுத்தம் பருப்பு விலையில் எந்த மாற்றம் செய்யப்படவில்லை.

ரேஷன் கார்டு தேவையில்லை: குறைந்த விலையில் கூட்டுறவு அங்காடிகள் மற்றும் மண்ணெண்ணெய் வழங்கும் மையங்களில் விற்கப்படும் பருப்புகளை வாங்குவதற்கு ரேஷன் கார்டு தேவையில்லை. தேவைக்கு ஏற்ப எவ்வளவு பருப்பு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

பருப்பு வகைகள் கிடைப்பதில் ஏதேனும் சிரமங்கள் மற்றும் புகார்கள் இருப்பின் கூட்டுறவுக் கடைகளை பொருத்தளவில் 044}2859 2828 என்ற தொலைபேசி எண்ணிலும், அமுதம் அங்காடிகளை பொருத்தளவில் 044}2835 1514 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை திங்கள்கிழமை அறிவித்துள்ளது.

### புதுச்சேரியில் மாட்டுத் தீவனம் விலை கிடுகிடு உயர்வு

First Published : 09 Mar 2010 01:55:54 AM IST
Last Updated : 09 Mar 2010 04:39:43 AM IST



புதுச்சேரி, மார்ச் 8: புதுச்சேரியில் மாட்டுத் தீவனத்தின் விலை மூட்டைக்கு ரூ. 85 உயர்த்தப்பட்டுள்ளது.

50 கிலோ மூட்டை தீவனத்தின் விலை இதுவரை ரூ.465 ஆக இருந்தது. இதில் கிலோவுக்கு ரூ.2 வீதம் மூட்டைக்கு ரூ.100 மானியமாக புதுச்சேரி அரசு அளிக்கிறது. இந்த மானியம் போக ரூ.365-க்கு ஒரு மூட்டை தீவனம் கிடைத்து வந்தது.

தற்போது இதன் விலை ரூ.465-லிருந்து ரூ.550 ஆக உயர்ந்துள்ளது. அதாவது மூட்டைக்கு ரூ.85 விலை உயர்ந்துள்ளது. இப்போது மானியம் போக பால் உற்பத்தியாளர்களுக்கு மூட்டை ரூ.450-க்கு கிடைக்கும்.

புதுச்சேரி அரசின் பால் கூட்டுறவு ஒன்றியமான பாண்லே நிறுவனம் மாட்டுத் தீவனம் தயாரித்து பால் உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. பாண்லே நிறுவனத்தின் கீழ் 97 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்களில் 12 ஆயிரம் பேர் பால் சப்ளை செய்கின்றனர். இவர்களுக்கு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் பாண்லே நிறுவனம் மாட்டுத் தீவனம் அளித்து வருகிறது.

விலை உயர்வு குறித்து புதுச்சேரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலர் து.கீதநாதன் கூறுகையில், முந்தைய விலையிலேயே விவசாயிகள் தீவனம் வாங்க முடியாமல் கஷ்டப்பட்டனர். கறவை மாடுகள் வைத்திருப்பதை பற்றியே விவசாயிகள் யோசித்துக் கொண்டிருக்கும் நிலையில் தற்போது தீவனம் உயர்த்தப்பட்டுள்ளது. கால்நடை தீவன விலை உயர்வைத் திரும்பப் பெற வேண்டும் என்றார்.

புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் செயலர் எஸ். எஸ். செந்தில்குமார் கூறுகையில், இப்போது மாட்டுத் தீவனம் மூட்டைக்கு ரூ.85 உயர்த்தப்பட்டுள்ளது. இது நடுத்தர விவசாயிகளைப் பாதிக்கும். ஏற்கெனவே புதுச்சேரியில் பால் உற்பத்தி குறைந்து வருகிறது. இந்த விலை உயர்வு நிச்சயம் பால் உற்பத்தியைப் பாதிக்கும்.

புதுச்சேரி அரசு, ரூ.1-க்கு ஒரு கிலோ அரிசி போன்ற திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. பால் உற்பத்தியைக் கருத்தில் கொண்டு 1 கிலோ மாட்டுத் தீவனத்துக்கான மானியத்தை ரூ.2 லிருந்து ரூ.5 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றார்.

## மாட்டுத் தீவன விலை உயர்வு ஏன்?

First Published : 09 Mar 2010 12:06:00 AM IST
Last Updated :

புதுச்சேரி, மார்ச் 8: புதுச்சேரியில் மாட்டுத் தீவனத்தின் விலை உயர்வு குறித்து பாண்லே நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

÷மாட்டுத் தீவனம் தயார் செய்து கொடுக்கும் பாண்லே நிறுவனத்துக்கு ஒரு மூட்டையின் உற்பத்தி செலவு ரூ.637.68 ஆக இருக்கிறது. உற்பத்தி செலவைக் காட்டிலும் 87.68 குறைவாகத்தான் இப்போது விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு குறைத்து விற்பனை செய்ததால் இந்த நிறுவனத்துக்கு 2007 முதல் இதுவரை ரூ.2.8 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

÷இதுகுறித்து பாண்லே நிர்வாகத்தின் மேலாண் இயக்குநர் வசந்தகுமார் கூறுகையில், அண்டை மாநிலங்களைக் காட்டிலும் புதுச்சேரியில் ரூ.250 வரை மாட்டுத் தீவனம் இப்போதும் குறைவுதான்.÷புண்ணாக்கு, எண்ணெய் எடுத்த தவிடு, மொலாசஸ் உள்ளிட்ட 11 வகை பொருள்களைச் சேர்த்துதான் மாட்டுத் தீவனம் தயார் செய்கிறோம்.

இந்நிலையில் இந்த மூலப் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. இதைச் சமாளிக்கதான் இப்போது விலையை உயர்த்தியுள்ளோம்.

÷பால் உற்பத்தியாளர்களுக்கு புதுச்சேரி அரசின் கால்நடை பராமரிப்புத்துறை ஒரு கிலோவுக்கு மானியமாக ரூ.2 அளிக்க வேண்டும். பால் உற்பத்தியாளர் நலன் கருதி நாங்கள் முன்கூட்டியே அந்த மானியத் தொகையைக் கழித்துக் கொண்டுதான் தீவனத்தை விற்பனை செய்து வருகிறோம். இப்படி கொடுத்த மானியத் தொகை ரூ.3.5 கோடி எங்கள் நிறுவனத்துக்கு வரவேண்டியுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறை இன்னும் இத் தொகையைக் கொடுக்காத நிலையிலும் பால் உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்து மானியத்துடன் விற்பனை செய்து வருகிறோம் என்றார்.

### இயற்கை வளம் பேணும் வேளாண் தொழில்நுட்பங்கள் அவசியம்

First Published : 08 Mar 2010 05:21:33 AM IST

Last Updated : 08 Mar 2010 11:38:46 AM IST

கோவை, மார்ச் 7: இயற்கை வளம் பேணும் வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம் என வேளாண் பல்கலை. பதிவாளர் ப.சுப்பையன் வலியுறுத்தினார்.

கோவை வேளாண் பல்கலை.யில் சனிக்கிழமை நடந்த இயற்கை வள ஆதாரம் காக்கும் வேளாண்மை பயிற்சி துவக்க விழாவில் அவர் பேசியது:

இனி வரும் காலங்களில் சுமார் 320 மில்லியன் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி செய்ய வேண்டி உள்ளது. தற்போது, வேளாண்மைக்காக பயன்படுத்தப்படும் நிலம், நீர் போன்ற இயற்கை ஆதாரங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

சர்வதேச உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் புள்ளி விவரப்படி நிலத்தடி நீர் வேளாண்மைக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. உலகளவில் ஒவ்வொர் ஆண்டும் 3.8 பில்லியன் டன் நீர் உபயோகப்படுத்தப்படுகிறது. அதில், சுமார் 70 விழுக்காடு வேளாண்மைக்கு பயன்படுகிறது.

2025}ல் இந்த நீர் தேவை இன்னும் 15 விழுக்காடு கூடுதலாக வாய்ப்பு உள்ளது. மேலும், தீவிர வேளாண்மையால் வேளாண் நிலங்களின் கரிம அளவு குறைந்து வருகிறது. மண் வளம் பாதிப்பு, புவி வெப்பமயமாதல் போன்ற நிகழ்வுகளால் 30 முதல் 50 விழுக்காடு வரை மண்ணில் கரிம இழப்பு கடந்த நூற்றாண்டில் ஏற்பட்டது. இதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்த்து எதிர்கால வேளாண்மையை வளமாக்க இயற்கை வளங்களை பேணுகின்ற வேளாண்மையில் ஈடுபட வேண்டும். அதற்கேற்ப தொழில்நுட்பங்களையும் கண்டறிந்து செயலாக்க வேண்டும்.

இதுபோன்ற இயற்கை வளம் பேணும் வேளாண் தொழில்நுட்பங்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பே கண்டறியப்பட்டிருந்தும் கடந்த 10 ஆண்டுகளில்தான் அவற்றின் முக்கியத்துவம் அதிகமாக உணரப்பட்டுள்ளது.

இதுபோன்ற வேளாண்மை உலகளவில் சுமார் 80 நாடுகளில் 80 மில்லியன் எக்டருக்கும் மேலான நிலப்பரப்பில் கடைப்பிடிக்கப்படுகிறது. மேலும், நிலத்தை தேவையற்ற முறையில் உழவு செய்யாமல் இருத்தல், வேளாண்மையில்

கிடைக்கக் கூடிய உபபொருள்களை சரிவர பயன்படுத்துதல், மண்ணின் வளம் காக்கக்கூடிய பயிர்கள், பயிர்த் திட்டங்கள், மாற்றுப் பயிர்கள் போன்ற சுற்றுப்புறச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் போன்ற மாற்று முறைகள் இப் புதிய வேளாண் அணுகுமுறையில் உள்ளடங்கும்.

இயற்கை வள ஆதாரங்களைப் பாதுகாத்து மனித குலத்துக்கு உணவு அளிக்கக் கூடிய அளவுக்கு இப் புதிய வேளாண் அணுகுமுறை சிறந்ததாகும்.

இதன்மூலம், குறைந்த உற்பத்திச் செலவு, குறைவான களைகள், நீர் மற்றும் சத்துக்களைப் பாதுகாத்தல் பயிரில் இருந்து கிடைக்கும் உபரிப் பொருள்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல், மண்ணின் உயிர் வளம் காத்தல் போன்ற நன்மைகள் கிடைக்கும் என்றார் அவர்.

மண் மற்றும் பயிர் மேலாண்மை மைய இயக்குநர் சி.ஜெயராமன், உழவியல் துறைத் தலைவர் பு.முத்துக்கிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சூரிய மின்னுற்பத்திக்கு ரூ.4,000 கோடி: அமைச்சர் தகவல்

First Published : 09 Mar 2010 04:21:27 AM IST



புது தில்லி, மார்ச் 8: ரூ. 4,000 கோடி செலவில் சூரிய மின்சார கிரிட் (தொகுப்பகம்) அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. தேசிய சூரிய ஆற்றல் திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக இத்திட்டத்துக்கு திங்கள்கிழமை மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்படி 1,100 மெகாவாட் சூரிய ஆற்றல் மின்னுற்பத்தி கிரிட் அமைக்கப்படும். இந்த கிரிட்டில் 100 மெகாவாட் சூரிய ஆற்றல் பலகைகள் நிறுவப்படும். இத்தகவலை மத்திய மரபுசாரா புதுப்பிக்கத்தக்க ஆற்றல்துறை அமைச்சர் ஃபரூக் அப்துல்லா தெரிவித்தார்.

மாநிலங்களவையில் திங்கள்கிழமை கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் இத்கவலைத் தெரிவித்தார். முதல் கட்டமாக சிறிய மின்னுற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இவை ஒவ்வொன்றும் 100 மெகாவாட் மின்னுற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். இவை அனைத்தும் மேற்கூரையில் அமைக்கப்படும் மின் நிலையங்களாகும். 2013-ம் ஆண்டுக்குள் இந்த இலக்கு எட்டப்படும். பின்னர் படிப்படியாக உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு 2022-ம் ஆண்டில் 20 ஆயிரம் மெகாவாட்டாக உயர்த்தப்படும். சூரிய ஒளியில் செயல்படும் 2 கோடி மின் விளக்குகள் அமைக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தவிர, 200 மெகாவாட் திறன் கொண்ட கிரிட்கள் மற்றும் 70 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் சூரிய சக்தியை சேமிக்கும் பகுதிகள் உருவாக்கப்படும்.

### விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம்

First Published : 08 Mar 2010 11:04:36 AM IST

வத்தலகுண்டு, மார்ச் 7: வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேளாண் துறை சார்பாக சிறு தானிய விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம் நடந்தது.

முகாமிற்கு கோம்பைப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பிச்சை தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் இந்திராணி போஸ் முன்னிலை வகித்தார்.

குறைந்த நீரைக்கொண்டு கம்பு சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது, உற்பத்தித் திறனை அதிகரிக்க, நவீன தொழில் நுட்பங்களை கையாளுதல், தரமான விதை உற்பத்தி மற்றும் விதை ஆய்வு குறித்து துணை வேளாண் அலுவலர்கள் கீதா, தண்டபாணி ஆகியோர் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தனர்.

ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் சாமியம்மாள், விமலா, கர்ணன், ஜெயப்பிரகாஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

### தட்ப வெப்ப மாற்றம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

First Published : 08 Mar 2010 11:03:46 AM IST

பட்டிவீரன்பட்டி, மார்ச் 7: நேரு யுவகேந்திரா, திண்டுக்கல் ஆர்.வி.எஸ். பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை சார்பில் வடமதுரை பிளாக் பி. புதுப்பட்டியில் தட்பவெப்ப மாற்றம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

நேரு யுவகேந்திரா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜி. விஜயா வரவேற்றார். ஆர்.வி.எஸ். கல்லூரி முதல்வர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். வடமதுரை பஞ்சாயத்து சேர்மன் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.

திண்டுக்கல் அமைதி அறக்கட்டளை திட்ட மேலாளர் பிரிட்டோ, பட்டிவீரன்பட்டி நா.சு.வி.வி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் கே.பி. ரவீந்திரன் ஆகியோர் கருத்தாளர்களாகக் கலந்துகொண்டனர். பொறியியல் கல்லூரி என்எஸ்எஸ் அலுவலர் சிவக்குமார் மரக்கன்றுதல் நடும் நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்தார். விநாடி-வினா உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

### வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வு முகாம்

First Published : 08 Mar 2010 11:02:46 AM IST

கொடைக்கானல், மார்ச் 7: கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகக் கல்லூரியில் உலகம் வெப்பமய மாதல் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் ஜெபராணி தலைமை வகித்துப் பேசினார். கொங்கு பண்பலையின் இயக்குநர் தங்கராஜ் புவி வெப்பமயமாதல் தொடர்புடைய வரைபடம் மற்றும் ஒளிப்படங்களுடன் விளக்கிப் பேசினார்.

ஏற்பாடுகளை கோடை பண்பலை மற்றும் கொங்கு பண்பலை இணைந்து செய்திருந்தது. அதைத் தொடர்ந்து பல்க லைக்கழக மாணவிகள் சார்பில் புவிவெப்பமயமாதல் தொடர்பான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்ச்சியில் கல்லூரி விரிவுரையாளர் ஜெனிபா மற்றும் மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். விரிவுரையா ளர் யசோதா நன்றி கூறினார்.

### வேளாண் அறிவியல் மையத்தை இடம் மாற்ற எதிர்ப்பு: ஆட்சியரிடம் மனு

First Published : 09 Mar 2010 12:42:20 AM IST

நாகர்கோவில், மார்ச் 8:பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தை இடமாற்றம் செய்யக் கூடாது என்று வலியுறுத்தி பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகளும் மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூவிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

இம் மையத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் திருவட்டார் சட்டப் பேரவை உறுப்பினர் லீமாரோஸ் தலைமையில் தேமுதிக மாவட்டச் செயலர் ஜெகநாதன், திருவட்டார் ஒன்றிய அதிமுக செயலர் சுதர்சன், சமத்துவ மக்கள் கட்சிப் பொதுக்குழு உறுப்பினர் அகஸ்டின், மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி சகாயம் உள்ளிட்டோர் ஆட்சியரை திங்கள்கிழமை சந்தித்து மனு அளித்தனர்.

பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையம் தோட்டப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளது. பேச்சிப்பாறையில் இம் மையம் அமைந்திருப்பதே தகுந்தது. இம் மையத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதாக தகவல் வருகிறது.

அவ்வாறு மாற்றுவது விவசாயிகளுக்கு இழப்பாக அமையும். எனவே பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தை வேறு இடத்துக்கு மாற்றும் முடிவைக் கைவிட வேண்டும்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இம் மாதம் 15-ம் தேதி தக்கலையில் ஆர்.டி.ஓ. அலுவலகம் முன் உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது என அவர்கள் அதில் தெரிவித்திருந்தனர்.

### நவரை பட்ட நெல்சாகுபடி கோனோவீடர் பயன்படுத்த வலியுறுத்தல்

First Published : 08 Mar 2010 01:50:04 AM IST
Last Updated : 08 Mar 2010 11:39:20 AM IST

திருச்செங்கோடு, மார்ச் 7: பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் பல கிராமங்களில் நவரை நெல் நடவு முடிந்து வளர்ச்சிப் பருவத்தில் பயிர் உள்ளதால் களை எடுக்க கோனோவீடர் பயன்படுத்துமாறு வேளாண் துறை வலியுறுத்தி உள்ளது.

பள்ளிப்பாளையம் வேளாண் உதவி இயக்குநர் பா.முரளீதரன் கூறியுள்ளது:-

செம்மை நெல் சாகுபிடியில் ஒரு நாற்று நடவு முறையைப் பின்பற்றியுள்ள விவசாயிகள் கோனோவீடர் என்ற களை மிதிக்கும் கருவியைப் பயன்படுத்தி களைகளை வயலிலேயே மக்க வைக்க வேண்டும். பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையம் மூலம் இதுவரை 160 கோனோவீடர் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. கிழக்கு தொட்டிபாளையம், அய்யம்பாளையம், சமயசங்கிலி, தட்டாங்குட்டை, கலியனூர் ஆகிய 5 டான்வா பண்ணை மகளிர் குழுக்களுக்கு தலா 5 கோனோவீடர் கருவிகளும், ஒரு நடவு அடையாளமிடும் கருவியும் வழங்கப்பட்டுளளது. இந்த கருவிகளை சம்பந்தப்பட்வர்களிடம் தொடர்பு கொண்டு வாடகைக்குப் பெறலாம். இது பற்றிய மேல்விபரங்கள் தேவைப்படின் பள்ளிப்பாளையம் செம்மை நெல் சாகுபடி தகவல் மையத்தை அணுகிப் பெறலாம் என்றார் முரளீதரன்.

### பி.டி. பருத்தி: மத்திய பருத்தி மேம்பாட்டுத் துறை அலுவலர்கள் ஆய்வு

First Published : 09 Mar 2010 09:30:25 AM IST

Last Updated :

பெரம்பலூர், மார்ச் 8: பெரம்பலூர் அருகேயுள்ள கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பி.டி. பருத்தியில், மத்திய வேளாண்மைத் துறையில் உள்ள பருத்தி மேம்பாட்டுத் துறை அலுவலர்கள் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தனர்.

பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், நடைபெறுகின்ற பருத்தி மினி மிஷன்-2 திட்டமான, பருத்தியில் முதல்நிலை செயல் விளக்கதிடல் மற்றும் பி.டி. பருத்தியில் தேசிய பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மைத் தகவல் அமைப்புத் திட்ட ஆராய்ச்சியை இக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

மத்திய வேளாண்மைத் துறையில் உள்ள பருத்தி மேம்பாட்டுத் துறை அலுவலர்கள், மும்பை பருத்தி மேம்பாட்டுத் துறை இயக்குநர் அனுபம்பாரிக், நாக்பூர் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலைய முன்னாள் இயக்குநர் மான்சிங் ஹைரான், மேற்கு வங்க வேளாண் ஆராய்ச்சித் துறை முன்னாள் துணை இயக்குநர் ஆர்.சி. மஞ்சும்தார், தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை பருத்தி துணை இயக்குநர் ஏ. மனோகரன் ஆகியோர், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள

சிறுகன்பூர், தெற்குமாதவி, அய்யலூர், கல்பாடி, பாடாலூர், குரும்பலூர் உள்ளிட்ட கிராமங்களில் பருத்தி விவசாயிகளிடம் பருத்தி மினி மிஷன்-2 திட்டம் குறித்து ஆய்வு செய்தனர்.

பின்னர், ரோவர் வேளாண் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சித் திடல்களைப் பார்வையிட்டனர்.

இந்த ஆய்வில், ரோவர் வேளாண் அறிவியல் மையத் தொழில்நுட்ப அலுவலர் சி. சங்கர் திட்ட அறிக்கை வாசித்தார்.

ஜ்ஜ் இந்த ஆய்வின் போது, வேளாண் உதவி இயக்குநர்கள் அண்ணாதுரை, இளங்கோவன், சி. செந்தமிழ்ச்செல்வன், வேளாண்மை அலுவலர்கள் தெய்வீகன், கி. பச்சியம்மாள், அன்பழகன், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் பாஸ்கரன், பாரதி, குமார், முதுநிலை ஆராய்ச்சியாளர் ப. சரவணன் உள்ளிட்ட களப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

### விவசாயிகள் சங்க மாநாடு

First Published : 08 Mar 2010 11:31:49 AM IST

சிவகங்கை, மார்ச் 7: சிவகங்கை ஒன்றியத்தில் கடுமையான வறட்சி நிலவுவதால், அப் பகுதியை வறட்சிப் பகுதியாக அரசு அறிவிக்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இச் சங்கத்தின் சிவகங்கை ஒன்றிய மாநாடு சோழபுரத்தில் நடைபெற்றது. இந்திய கம்யூ. சிவகங்கை ஒன்றியக் குழு உறுப்பினர் என். ரகுநாதன் தலைமை வகித்தார். சங்க மாநிலத் தலைவர் எஸ்.குண்சேகரன் எம்.எல்.ஏ., மாவட்டத் தலை வர் இருளப்பன், செயலாளர் முத்துராமலிங்கம், விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் விஸ்வநாதன், இந் திய கம்யூ. ஒன்றியச் செயலாளர்கள் மற்றும மாவட்டக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்டட தீர்மானங்கள்:

சிவகங்கை ஒன்றியம் இந்த ஆண்டு கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒருபகுதி நடவு செய்யாமலும், இன்னொரு பகுதி நடவு செய்து சாவியாகவும் மாறியுள்ளது. கண்மாய்களில் கால்நடைகள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. கடுõம் வறட்சியால் சிவகங்கை ஒன்றிய மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, சிவகங்கை ஒன்றியப் பகுதியை வறட்சிப் பாதித்த பகுதி என அறிவித்து, போதிய நிவாரணப் பணிகளைத் துவங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட நிர்வாகம் உரிய காலத்தில் அரசுக்கு இதுதொடர்பான அறிக்கை அனுப்ப வேண்டும். கரும்பு உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு, டன் ஒன்றுக்கு வயல் விலையாக ரூ. 2,500 வழங்க வேண்டும்.

அரசு அறிவித்தபடி 10 மணி நேரம் தடையில்லா மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மா னங்கள் நிþ றவேற்றப்பட்டுள்ளன.

### கோபி உழவர் சந்தையில் ரூ. 4 கோடிக்கு காய்கறி விற்பனை

First Published : 08 Mar 2010 01:55:28 AM IST

கோபி, மார்ச் 7: கோபி உழவர் சந்தையில் கடந்த 11 மாதத்தில் ரூ. 4 கோடிக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளதாக கோபி வேளாண்மை அதிகாரி கார்த்திகேயன் கூறினார்.

÷கோபியை அடுத்த மொடச்சூரில் உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது. இங்கு பொலவக்காளிபாளையம், நாதிபாளையம், கலிங்கியம், அத்தாணி, டி.என்.பாளையம், பங்களாபுதூர் வெள்ளாங்கோவில் உள்பட 55 வருவாய் கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வருகிறார்கள். இதற்காக விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

÷தினமும் சராசரியாக 100 விவசாயிகளும், 1800 பொதுமக்களும் வந்து செல்கின்றனர். இந்த சந்தை அதிகாலை 4.30 மணிக்கு தொடங்கி காலை 8 மணி வரை செயல்படுகிறது.

÷இங்கு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 11 மாதங்களில் மொத்தம் 34,193 விவசாயிகள் 3 ஆயிரத்து 108 டன் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வந்துள்ளனர். இவற்றை 6 லட்சத்து 21 ஆயிரத்து 634 பேர் வாங்கிச் சென்றுள்ளனர். இதன் மதிப்பு ரூ.4 கோடியே 5 லட்சத்து 70 ஆயிரத்து 178 ஆகும்.

÷இதில் கடந்த ஜனவரி மாதம் 286 டன் காய்கறிகளை 3,572 விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இவை ரூ.37 லட்சத்து 55 ஆயிரத்து 396 ரூபாய்க்கு விற்பனை ஆனது. 57 ஆயிரத்து 399 பேர் வாங்கிச் சென்றனர்.

÷பிப்ரவரி மாதம் 3 ஆயிரத்து 170 விவசாயிகள் 259 டன் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். இவற்றை 51,933 பேர் வாங்கி சென்றனர். இதன் மதிப்பு ரூ.30 லட்சத்து ஆயிரத்து 96 ஆகும்.

÷இத்தகவலை, உழவர் சந்தை வேளாண்மை அதிகாரி கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

**உதவி வேளாண்மை அலுவலர்களுக்கான பயிலரங்கம்**

First Published : 08 Mar 2010 10:32:09 AM IST

Last Updated : 08 Mar 2010 11:44:10 AM IST

திருச்சி, மார்ச் 7: திருச்சியில் உதவி வேளாண்மைத் அலுவலர்களுக்கான பயிலரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்தப் பயிலரங்கத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் ச. இசக்கிமுத்து தலைமை வகித்தார்.

இதில், வேளாண்மைத் துறையில் புதிதாக நியமிக்கப்பட்ட 1,707 பேருக்கு சங்கத்தின் விதிமுறைகள், வேளாண்மைத் துறையில் உள்ள விதிமுறைகள், வேளாண்மைக்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்கள் ஆகியவை குறித்து விளக்கமும், பயிற்சியும் அளிக்கப்பட்டன.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் என். மனோகரன், தொழில் சங்கத் தலைவர் கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சங்கப் பொதுச் செயலர் எஸ். கண்ணுச்சாமி வரவேற்றார். மாவட்டச் செயலர் எஸ். ஜீவானந்தம் நன்றி கூறினார்.

**திருவெறும்பூர் பகுதிகளில் வேளாண் துறை ஆணையர் ஆய்வு**

First Published : 08 Mar 2010 10:32:31 AM IST
Last Updated : 08 Mar 2010 11:44:04 AM IST

திருவெறும்பூர், மார்ச் 7: திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வேளாண் கோட்டத்துக்குள்பட்ட அரசங்குடி கிராமத்தில் வேளாண்மை திட்டம் மற்றும் விரிவாக்கப் பணிகள் குறித்து தமிழக வேளாண் துறை ஆணையர் கோசலராமன் அண்மையில் ஆய்வு செய்தார்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசங்குடி கிராமத்தில் சந்தனம் மகளிர் சுய உதவிக் குழுவினர், நடராஜபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 50 சத மானியத் தொகையுடன் ரூ. 2,50,000 கடன் பெற்று, சூடோமோனஸ், புளூரோசன்ஸ் எதிர் உயிர் பாக்டீரியாவை உற்பத்தி செய்யும் ஆய்வகத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதை வேளாண் ஆணையர் கோசலராமன் ஆய்வு செய்தார். பின்னர், மகளிர் சுய உதவிக் குழுவினரிடம் ஆய்வக செயல்பாடுகளை கேட்டறிந்தார்.

நடராஜபுரம் அன்பரசனின் வயலில் அணுசரணை ஆராய்ச்சி பாத்திகளில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் புது ரகங்களின் சாகுபடி, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேர் செம்மை நெல் செயல் விளக்க வயலையும் ஆணையர் பார்வையிட்டார்.

வேளாண் துறை ஆணையருடன், திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (திட்டம்) பொன்னுசாமி, மத்திய திட்ட துணை இயக்குநர் ராம்குமார், சிவராஜ், திருவெறும்பூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரா. ரவி, வட்டார வேளாண்மை அலுவலர் உஷாராணி, அமல்ராஜ், உதவி அலுவலர் சின்னபாண்டி ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

**நீர்வள நிலவள திட்ட விழிப்புணர்வு முகாம்**

நடுவீரப்பட்டு : சி.என்.பாளையத்தில் நீர்வள நிலவள திட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது.
பண்ருட்டி அடுத்த சி.என்.பாளையத்தில் வேளாண்மை மற்றும் வணிகத்துறை சார்பில் நீர்வள நிலவள திட்ட விழிப்புணர்வு முகாம் நடந் தது. மணிலா பொருள்குழு தலைவர் பஞ்சாட்சரம் தலைமை தாங்கினார்.முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ராஜேந்திரன் வரவேற்றார். இதில் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆறுமுகம், விஜயசண்முகம் கலந்து

கொண்டு திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். இதில் வேணுகோபால், கனகசபை, ராமு, சுப்பரமணியன், குப்புசாமி உட்பட 50க்கும் மேற் பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### இடுபொருட்கள் வழங்கும் விழா

திட்டக்குடி : ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திட்டக்குடி வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய பொருட்கள் வழங்கும் விழா நடந்தது.

உழவர் மன்றத் தலைவர் வேணுகோபால் தலைமை தாங்கினார். ராஜசேகர், துணை வேளாண் அலுவலர் டென்சிங், உதவி வேளாண் அலுவலர் குணசேகரன் முன்னிலை வகித்தனர். மங்களூர் உதவி இயக்குனர் பன்னீர் செல்வம் மானிய விலை பொருட்களை விவசாயிகளுக்கு வழங்கினார். உதவி வேளாண் அலுவலர்கள் பிரகாஷ், திருமுருகன், ரமேஷ், சின்னதுரை மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

### காய்கள் சிறுத்து ஏமாற்றியது நிலக்கடலை சாகுபடி சரிபாதியாக விளைச்சல் சரிந்து நஷ்டம்

அந்தியூர்: நிலக்கடலையில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லாமல் விவசாயிகள் புலம்புகின்றனர்.

அந்தியூர் மலைகருப்புச்சாமி கோவில், வரட்டுப்பள்ளம் மலையடிவாரம், எண்ணமங்கலம், கோவிலூர், பருவாச்சி உள்ளிட்ட இடங்களில் மஞ்சள், பருத்தி, வாழை, நிலக்கடலை, துவரை ஆகியவை சாகுபடியாகிறது.

மஞ்சள் அறுவடை துவங்கியும், ஆள் பற்றாக்குறை நிலவி வருவதால், வெளியூர் ஆட்களை கொண்டு விவசாயிகள் அறுவடையை தீவிரப்படுத்தியுள்ளனர். பொருளாதார பற்றாக்குறை காரணமாக, விவசாயிகள் பலரும் மஞ்சளை விற்று வருகின்றனர். விலை குறைந்திருப்பதால், விற்பனை கூடத்திலும், வீட்டிலும் ஒரு சில விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைத்துள்ளனர். செம்மண் நிலத்தில் நன்றாக விளையும் நிலக்கடலை பருவாச்சி, இரட்டைக்கரடு, ஒலகடம், அந்தியூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நான்கு மாதப் பயிரான நிலக்கடலை வைகாசி, ஆடி, கார்த்திகை மாதங்களில் பயிராகும். நடப்பாண்டு அறுவடைக்கு தயாராகியுள்ள நிலக்கடலை செடிகள், கார்த்திகை மாதத்தில் பயிர் செய்யப்பட்டவை. நிலக்கடலைக்கு அதிகளவு தண்ணீர் தேவைப்படாது என்பதால், மானாவாரி விவசாயிகளும் அதிகளவு பயிர் செய்கின்றனர்.ஏக்கருக்கு 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை சாகுபடி செலவாகிறது. சென்றாண்டு நிலக்கடலை சாகுபடி செய்த மானாவாரி மற்றும் கிணற்றுப் பாசன விவசாயிகளுக்கு ஓரளவுக்கு லாபம் கிடைத்தது. ஆனால், நடப்பாண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு எதிர்பார்த்த மகசூல் இல்லை. ஏக்கருக்கு 25 மூட்டை நிலக்கடலை விளைய வேண்டும். நல்ல முறையில் தண்ணீர், உரம், குப்பையிடப்பட்ட நிலத்தில் 30 மூட்டைக்கு மேலும் விளைச்சல் கிடைக்கும். ஆனால், நடப்பாண்டில் எதிர்பார்த்த அளவு விளைச்சல் இல்லை. ஏக்கருக்கு பத்து முதல் 12 மூட்டை மட்டுமே விளைந்திருக்கிறது. குப்பை, உரம், தண்ணீர் பாய்ந்த நிலங்களிலும் சொல்லிக் கொள்ளும்படியான மகசூல் இல்லை. மேலும், நிலக்கடலையில் மாவுப் பூச்சி தாக்குதல் அதிகமாக இருக்கிறது. இதனால், காய்கள் வெள்ளை நிறத்தில் பயன்படுத்த முடியாத நிலையிலும், சிறுத்தும் உள்ளன. இதுபற்றி விவசாயி ஒருவர் கூறியதாவது:

சென்றாண்டுகளை விட நடப்பாண்டு நிலக்கடலை விளைச்சல் இல்லாமல், காய் மிகவும் சிறுத்துள்ளது. நிலக்கடலை பயிரிட ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகியுள்ள நிலையில், பத்து மூட்டைகள் கூட கிடைக்கவில்லை. விளைச்சல் ஒரு பக்கம் ஏமாற்றம் அளித்திருக்கும் நிலையில், மாவுப்பூச்சி தொல்லையால் காய்கள் வளராமலும், பயன்படுத்த முடியாத நிலையிலும் உள்ளன. வேளாண் அதிகாரிகளை தொடர்பு கொண்டாலும், அவற்றுக்கான காரணம் அவர்களுக்கு தெரியவில்லை. மண் பரிசோதனை செய்வது சம்பந்தமாகவும் அதிகாரிகள் உதவி செய்யாமல், தயக்கம் காட்டுகின்றனர். இதனால், நிலக்கடலை பயிர் செய்த விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

---

### விவசாயிகளுக்கு பயிற்சி

செக்கானூரணி : திருமங்கலம் வட்டார பருத்தி விவசாயிகளுக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி நடந்தது. பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நடத்தப்பட்ட இந்த பயிற்சிக்கு மதுரை வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமை வகித்து, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கினார். திருமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் மனோகரன் , துணை வேளாண்மை அலுவலர் மார்க்கண்டன் விளக்கினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஜெயக்கொடி செய்திருந்தார்.

### கோடை வெப்பம் அதிகரிப்பு: அணைகளில் நீரின் அளவு குறைவு

ஊட்டி : கோடையின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர்மட்டம் குறைந்து வருகிறது.
மலை மாவட்டமான நீலகிரியில் கோத்தகிரி, கூடலூர் பகுதிகளில் கோடையின் தாக்கம் சற்று அதிகரித்துள்ளது. தற்போது, சராசரியாக 23 டிகிரி செல்சியஸ் அளவுக்கு ஊட்டியில் வெப்பநிலை உள்ளது. இது ஒருபுறமிருக்க, இம்மாவட்டத்தில் உள்ள அணைகளில் கோடை வெப்பத்தின் காரணமாகவும், மின் உற்பத்திக்கு தண்ணீர் திறந்து விடப்படுவதாலும் தண்ணீரின் அளவு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.
இதே நிலையில், தொடர்ந்து அணைகள் திறக்கப்பட்டு வந்தால் அடுத்தமாதம் பெரும்பாலான அணைகளில் தண்ணீரின் அளவு வெகுவாக குறையும் நிலை உருவாகும். குறிப்பாக, மக்களின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தப்படும் பார்சன்ஸ்வேலி உட்பட முக்கிய அணைகளின் தண்ணீர் உள்ளூர் மக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.
இத்தகைய அணைகளின் நீர்மட்டம் குறையாமல் இருந்தால் மட்டும் கோடையில் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளமுடியும். ஊட்டி அருகே உள்ள பைக்காரா நீர் தேக்கத்தில் கடந்த மழையின்போது காணப்பட்ட தண்ணீரின் அளவை விட, தற்போதுள்ள தண்ணீரின் அளவு வெகுவாக குறைந்துள்ளது. இதற்கு காரணம் மின் உற்பத்திக்காக தற்போது அங்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.
இது குறித்து சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் ரவீந்தரன் கூறுகையில்,""கடந்த சில மாதங்களாக பைக்காரா ஏரியில் காணப்பட்ட தண்ணீரின் அளவை விட, தற்போது தண்ணீர் குறைந்து வருகிறது.  தண்ணீர் மேலும் குறைந்தால், கோடை சீசனின் போது ஏரியின மட்டம் தற்போது உள்ளதை விட குறைய வாய்ப்புள்ளது. இதற்குள் "கோடை மழை' வந்தால் ஓரளவு தண்ணீரின் மட்டம் உயரும் என எதிர்பார்க்கிறோம்," என்றார்.

**"சம்மர் ஷவர்' அவசியம் :** வனப்பகுதிகளை அதிகமுள்ள நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வறட்சியின் பிடியில் சிக்கி வருகின்றன. இதனால், ஆங்காங்கே வனத்தீயும் பரவி வருகிறது. குறிப்பாக, சரணாலயம் மற்றும் முதுமலை பகுதிகளில் வெப்பம் அதிகரித்து வருகிறது. இதனால், கோடை சீசனின் போது தண்ணீர் பற்றாக்குறை வரவும் வாய்ப்புள்ளது.  இதனை தணிக்க, கோடை மழை பெய்தால் மட்டுமே வனத்தீயில் இருந்தும், தண்ணீர் பிரச்னைகளில் இருந்தும் இம்மாவட்டத்தை காக்க முடியும்.மேலும் வனவிலங்குகளின் குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். அதற்கு "வருண பகவான்' மனம் இறங்க வேண்டும் என்பதே பொதுமக்களின் பிரார்த்தனையாக உள்ளது.

**விவசாய சங்க மாநாடு**

சிவகங்கை : விவசாயிகள் சங்க ஒன்றிய மாநாடு சிவகங்கை அருகே சோழபுரத்தில் நடந்தது.
கவுன்சிலர் ரகுநாதன் தலைமை வகித்தார். லட்சுமணன் முன்னிலை வகித்தார். குணசேகரன் எம்.எல்.ஏ., சங்க தலைவர் இருளப்பன், பொருளாளர் முத்துராமலிங்கம், விவசாய தொழிலாளர் சங்க தலைவர் விஸ்வநாதன், இந்திய கம்யூ., ஒன்றிய செயலாளர்கள் ராஜூ, சந்திரன் பங்கேற்றனர். கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாய் வழங்க வேண்டும்; நீர்,நில வள திட்ட முறைகேடுகளை களைந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஒன்றிய செயலாளர் மாதவன் நன்றி கூறினார்.

**கம்பத்தில் நெல் கொள்முதல் மையம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

கம்பம் : விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் நெல் கொள்முதல் நிலையம் கம்பத்தில் திறக்கப்பட்டுள்ளது.
விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்க மத்திய அரசின் நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என்று அரசுக்கு விவசாயிகள் கோரிக்கைவிடுத்தனர். விவசாயிகளின் கோரிக் கையை ஏற்று கம்பத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மண்டல மேலாளர் சரவணன் தலைமை வகித்தார். தரக்கட்டுப்பாட்டு அதிகாரி செல்லப்பாண்டி முன்னிலை வகித்தார். கண்காணிப்பாளர் ஈஸ்வரன் வரவேற்றார்.
அதிகாரிகள் கூறுகையில், சன்னரகத்திற்கு குவிண்டாலுக்கு ஆயிரத்து 100 ரூபாய், பொது ரகம் குவிண்டாலுக்கு ஆயிரத்து 50 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 100 மூடைக்கு மேல் உள்ள விவசாயிகளின் களத்திற்கே சென்று கொள்முதல் செய்யப்படும். 100 மூடைக்கு கீழ் என்றால், விவசாயிகள் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு நெல் மூடைகளை கொண்டு வர வேண்டும். நெல் கொள்முதல் செய்த அன்றே பணப்பட்டுவாடா செய்யப்படும். ஈரப்பதம் 17 சதம் வரை ஏற்றுக் கொள்ளப்படும். தூசி, மண், கல் போன்றவைகளை சலிக்க சல்லடை வசதியும் உள்ளது என்றனர்.
நிகழ்ச்சியில் ஐந்து மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் அப்பாஸ், நீரினை பாய்ச்சுவோர் சங்க நிர்வாகி ராமகிருஷ்ணன்,

**உரம் விலையை குறைக்க வேண்டும் விவசாயிகள் சங்க மாநாட்டில் தீர்மானம்**

கோட்டூர் : உர விலையை உடன் குறைக்க வேண்டும் என்று கோட்டூரில் நடந்த தமிழ்நாடு வட்டார விவசாயிகள் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.கோட்டூரில் தமிழ்நாடு வட்டார விவசாயிகள் சங்க மாநாடு நடந்தது. தலைவர் பாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட கவுன்சிலர் அம்புஜம், மாவட்ட துணைத்தலைவர் சிவஞானம், ஒன்றிய இந்திய கம்யூ., செயலாளர் மாரிமுத்து, விவசாயத் தொழிலாளர் சங்க செயலாளர் ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில செயலாளர் துரைமாணிக்கம் சங்க கொடியேற்றி மாநாட்டை தொடக்கி பேசினார். இதில் மன்னார்குடி எம்.எல்.ஏ., சிவபுண்ணியம் பேசுகையில், பி.டி. கத்திரிக்காயை தடை செய்ய ஆவன செய்ய வேண்டும். இந்தாண்டு மத்திய பட்ஜெட்டில் விவசாயத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. உர விலை உயர்த்தப்பட்டுள்ளது. உரத்தை உற்பத்தி செய்பவர்களே உர விலையை நிர்ணயம் செய்யலாம் என்று மத்திய அரசு அறிவித்து இருப்பது கண்டிக்கத்தக்கது. வரும் சட்டசபை கூட்டத்தில் விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் உற்பத்தியை பெருக்க உரிய சட்டம் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.காவிரி டெல்டா பாசன

சங்க பொதுச்செயலாளர் மன்னார்குடி ரங்கநாதன் பேசுகையில், மத்திய, மாநில அரசுகள் உணவு உற்பத்தியை பெருக்குவதற்குரிய நடைமுறைகளை கொண்டு வரவேண்டும்.

விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் விவசாய இடுபொருட்கள் விலையை குறைத்தும், நெல், கரும்பு போன்றவற்றுக்கு உரிய விலையை நிர்ணயிக்கவும் முன் வரவேண்டும் என்றார்.
எம்.எல்.ஏ., உலகநாதன் பேசுகையில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அனைத்து சங்கங்களும் பாராட்டும் வகையில் முன்மாதிரியாக விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் செயல்பட வேண்டும்.
தமிழக அரசு மின்தட்டுப்பாட்டை நீக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.மாநாட்டில் நெல் குவிண்டாலுக்கு ஆயிரத்து 500 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நூறுநாள் வேலைத்திட்டத்தில் ஆண்டுக்கு ஒருமுறை வாய்க்கால்களை தூர் வார வேண்டும். மத்திய அரசு முகவராக இல்லாமல் நேரடி நெல் கொள்முதலை தமிழக அரசு அமல்படுத்த வேண்டும். உர விலையை உயர்த்தி உள்ளதை குறைக்க வேண்டும். மத்திய அரசு உரிய மானியத்தை வழங்க வேண்டும். பாமணி ஆறு, கோரையாறு, அரிசந்திரா நதி, வெண்ணாறு, வெட்டாறு மற்றும் அதன் கிளை ஆறுகளில் உடைப்பு ஏற்பட்ட இடங்களில் கரைகளை அகலப்படுத்தி, உயர்த்தி தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கிளை செயலாளர் மாசிலாமணி, கணேசன், சவுந்தரராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.வட்டார விவசாயிகள் சங்க செயலாளர் விஸ்வநாதன் வரவேற்றார். கிளை செயலாளர் சிவசண்முகம் நன்றி கூறினார்.

விவசாயிகள் சங்கம் சார்பில் நாராயணன், சுகுமாரன், நடராசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மரக்கன்றுகள் வழங்கும் விழா

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய் நல்லூர் அருகே பள்ளியில் இலவச மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது. திருவெண்ணெய் நல்லூர் அடுத்த காந்தலவாடி நடுநிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு மரக் கன்றுகள் வழங்கும் விழா நடந் தது. பள்ளி தலைமை ஆசிரியர் குப் புசாமி தலைமை தாங்கினார். ராஜசிவா, குருபரன்,விஜயலட்சுமி முன்னிலை வகித்தனர். முன்னாள் டி.இ.ஓ., பாலசுப்ரமணியன் வள் ளலார் பசுமை காப்பகம் சார்பில் மாணவர்களுக்கு இலவசமாக மரக் கன்றுகளை வழங்கினார்.

### பயறு உற்பத்தி அதிகரிக்க விழிப்புணர்வு நாடகம்

செஞ்சி : வல்லம் வட்டாரத்தில் பயறுவகை உற்பத்தி அதிகரிக்க வேளாண் துறை சார்பில் கலைக்குழு பிரசார நாடகம் நடந்தது.
மேல்சேவூர் கிராமத்தில் பயறு வகை உற்பத்தி அதிகரிக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதற்காக வேளாண்துறை சார்பில் சேலம் சந்திரிகா கலைக்குழுவினரின் பிரசார நாடகம் நடந்தது. வல்லம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் துரைசாமி தலைமை தாங் கினார். வட்டார வேளாண் அலுவலர் சரவணன் முன் னிலை வகித்தார். இதில் சுற்றுப்பகுதியில் உள்ள விவசாயிகள், துணை வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மரக்கன்றுகளை அழிப்பதால் விவசாயிகள் கலக்கம் : கறார் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

வத்திராயிருப்பு : வத்திராயிருப்பு பகுதியில் சமீபகாலமாக சமூக விரோதிகள் தொடர்ந்து மரக்கன்றுகளை குறிவைத்து அழித்து வருவதால் விவசாயிகள் பெரும் கலக்கமடைந்துள்ளனர்.

குண்டர் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளனர்.வத்திராயிருப்பு அருகே கான்சாபுரத்தில் டிச., 9ம் தேதி இரு மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் இரு பிரிவினருக்கு இடையிலான மோதலாக மாறியது. ஒரு தரப்பை சேர்ந்தவரது தோட்டத்தில் இருந்த 50 தேக்கு மரக்கன்றுகள் வெட்டி சாய்க்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட பதட்டம் தணிவதற்குள் அத்திகோயில் பகுதியில் இருளாயி அம்மாள் என்பவருக்கு சொந்தமான தோப்பில் இருந்த 27 தேக்கு, 41 தென்னை கன்றுகள் வெட்டி அழிக்கப்பட்டன. அர்ச்சுனாபும் இருளாண்டி(31), சரவணன்(36) ஆகியோரது தோப்பில், 350 வாழை கன்றுகளை மர்மநபர்கள் வெட்டி சாய்த்தனர்.

தொடர் சம்பவங்கள்: பின்னர், சில நாட்கள் அமைதி நிலவியது. அடுத்த சில நாட்களிலேயே வ.புதுப்பட்டி பாண்டியராஜன், ராஜேந்திரன், சுப்பையா, குமரேசன் ஆகியோரது தோப்புகளில் இருந்த மாங்கன்றுகள் சிலரால் வெட்டி அழிக்கப்பட்டன. அளவற்ற இழப்பு: உப்புச்சப்பில்லாத காரணங்களுக்காக தொடர்ந்து மரக்கன்றுகள் வெட்டி சாய்க்கப்படுவதால் விவசாயிகள் பெரும் இழப்புகளுக்கு ஆளாகி வேதனையில் ஆழ்ந்துள்ளனர். புவி வெப்பமயமாதலை தடுக்க அரசே, வீட்டுக்கு வீடு மரக்கன்றுகளை கொடுத்து நடச்சொல்லும் இந்த வேளையில், கடந்த சில மாதங்களுக்குள்ளாகவே வருடக்கணக்கில் பாடுபட்டு வளர்த்த ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இது வத்திராயிருப்பு பகுதி விவசாயிகளுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தி இருப்பது ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம், புவி வெப்பமயமாதலை தடுப்பதிலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே, வனவிலங்குகள் தொந்தரவால் மகசூல் இழப்பை எதிர்கொள்ளும் விவசாயிகள், சிலரின் அர்த்தமில்லாத ஆத்திர செயல்களால் ஏற்படும் இழப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது குண்டர்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ராஜபாளையத்தில் தாமதமாக பூக்கும் மாம்பூக்கள்

ராஜபாளையம் : ராஜபாளையம் பகுதியில் நடப்பாண்டில் மிகவும் தாமதமாக மாமரங்களில் பூக்கள் பூக்க துவங்கியுள்ளன. மாம்பழ விளைச்சல் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.
ராஜபாளையம் மேற்கே அய்யனார்கோயில், மருங்கூர், புரசம்பாறை, சம்மந்தபுரம், செண்பகத் தோப்பு, வாழைக்குளம், சேத்தூர், தேவதானம் பகுதிகளில் 2,500 ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன. பெரும்பாலும் சப்பட்டை, பஞ்சவர்ணம் ரகங்களும், சில இடங்களில் ஆரா ரகங்களும் பயிரிடப்பட்டுள்ளன. அதிக மழை, வறட்சி, விலை வீழ்ச்சி உள்ளிட்ட ஏதாவதொரு பிரச்னையால் ஆண்டுதோறும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்த நிலையில், நடப்பாண்டில் உரிய காலத்தில் பூக்கள் பூக்காததால் மிகுந்த ஏமாற்றத்தில் இருந்தனர். வழக்கமாக மார்கழி இறுதியில் மாமரங்களில் பூ பூக்கும். நடப்பாண்டில் தை மாதத்திற்கு பின்பும் பூக்கள் தோன்றவில்லை. மாசி மாத இறுதியில் பூக்கள் பூத்து குலுங்க துவங்கியுள்ளன. மொத்தமுள்ள மரங்களில் 40லிருந்து 50 சதவீத மரங்களே தற்போது பூத்துள்ளன. மேலும் பல மரங்களில் இலைகள் தளிர்விட்டு பூக்கும் சூழ்நிலை நிலவுகிறது.

ராஜபாளையம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கோவிந்தராஜன் கூறியதாவது: தாமதமாக மாம்பூக்கள் பூத்துள்ள நிலையில், அவை உதிராமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். பெருமளவிலான பூக்கள் உதிராமல் காய் பிடிப்பதற்கு, நான்கரை லிட்டர் தண்ணீரில், இரண்டரை மில்லி "பிளானாபிக்ஸ்' என்ற மருந்தை கலந்து பூக்கள் மீது தெளிக்க வேண்டும். அதே போல், பூ பூக்காத மாமர இலைகளில் ஒரு லிட்டர் தண்ணீரில், பத்து கிராம் யூரியாவை கலந்து தெளிக்க வேண்டும். இது பூக்கள் பூப்பதற்கான தூண்டுகோலாக இருக்கும், என்றார்.
விற்பனையும் தாமதம்: வழக்கமாக மாசி, பங்குனி மாதங்களிலேயே மார்க்கெட்டில் மாம்பழ வரத்து துவங்கிவிடும்.

விலை அதிகமாக இருக்கும். அதைத் தொடர்ந்து சித்திரை, வைகாசியில் அதிக வரத்து காரணமாக விலை குறைந்திருக்கும். நடப்பாண்டில் சித்திரையில் தான் மாம்பழ வரத்தே துவங்கும் நிலை உள்ளது. விளைச்சல் குறைவாக இருக்கும் பட்சத்தில் மாம்பழத்தின் விலை இதுவரை இல்லாத வகையில் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

### விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

உடுமலை : வேளாண் துறை சார்பில், விதை கிராம திட்டத்தில் மூன்று கட்டமாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பெதப்பம்பட்டி வேளாண் விரிவாக்க மைய வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு)சைலஸ் வெளியிட்டுள்ள அறிக்கை: வேளாண் துறை சார்பில் விதை கிராம திட்டத்தில் புதுப்பாளையம், இலுப்ப நகரம், பூளவாடி, குடிமங்கலம் மற்றும் ஆமந்தகடவு கிராமங்களில் பயிற்சி நடந்தது. துறை அலுவலர்கள் பங்கேற்று தரமான விதை உற்பத்தி, ரகங்களின் குணாதிசயங்கள் மற்றும் பண்புகளை தெரிந்து கொள்தல், விதை அறுவடை சுத்திகரிப்பு, சேமிப்பு வழிமுறைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

விதை உற்பத்தியால் தானிய உற்பத்தியை விட, அதிக லாபம் பெறுவது குறித்து தெரிவிக்கப்பட்டது. விதை சான்றளிப்பு துறையின் பணிகள், நோய் மற்றும் பூச்சி பாதுகாப்பு, விதை சேமிப்பு குறித்து தெரிவிக்கப்பட்டது. மூன்று கட்டமாக வழங்கப்பட்ட இப்பயிற்சியை விவசாயிகள் பின்பற்றி விதை பண்ணைகள் அமைத்து விதை தேவையை பூர்த்தி செய்து அதிக வருமானம் பெறலாம். இவ்வாறு, சைலஸ் கூறியுள்ளார்.

### வேளாண் விரிவாக்க மையங்களில் ஆலோசனை

உடுமலை : "வேளாண் பொறியியல் துறை விண்ணப்பங் களை விவசாயிகள் பதிவு செய்ய, வியாழக்கிழமைதோறும் வேளாண் விரிவாக்க மையங்களில் ஆலோசனை மையம் செயல்படும்,' என, விவசாயிகள் பயிற்சி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஐசோபாம் பயறு வகை பெருக்கு திட்டத்தில், வேளாண் துறை சார்பில் விவசாயிகள் பயிற்சி முகாம், பெதப்பம்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் நடந்தது. ஆழியார் தென்னை நாற்று பண்ணை உதவி பேராசிரியர் வாசுகி பங்கேற்றார்; கொண்டைக்கடலை, கொத்தமல்லி சாகுபடியில் இரட்டை சால் பயிர் சாகுபடி, ஊடுபயிர், டி.ஏ.பி., தெளித்தல் உட்பட அதிக மகசூல் பெற பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார்.

வேளாண் உதவி இயக்குனர் சைலஸ் பேசியதாவது: வேளாண் துறை சார்பில் பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்கவும், மக்களின் புரதச்சத்து தேவையை நிறைவு செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. நடப் பாண்டில் ஒருங்கிணைந்த பயறு அபிவிருத்தி திட்டத்தில், ஐந்து எக்டேர் செயல்விளக்க பண்ணை கள் அமைக்க மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. டி.ஏ.பி., உரம், நுண்ணூட்ட சத்து 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது, என்றார்.

வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் நீலகண்டன், பொறியியல் துறை சார்பில் வழங்கப்படும் மானியங்கள் குறித்தும், விவசாயிகள் தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்ய ஒவ்வொரு வியாழக்கிழமையும் பெதப்பம்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் ஆலோசனை மையம் நடத்தப்படுகிறது, என்றார்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து துணை வேளாண் அலுவலர் செல்வராஜ் பேசினார். வேளாண் அலுவலர் ஷர்மிளா பானு உட்பட பலர் பங்கேற்றனர்.

## அமராவதியில் நீர் மட்டம் சரிவு: நெற்பயிர் சாகுபடிக்கு திடீர் சிக்கல்

*மார்ச்* 09,2010,00:00 IST



திருப்பூர்: அமராவதி அணையின் நீர் மட்டம் குறைந்து வருவதால், நெற்பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் கருகும் அபாய சூழ்நிலை நிலவுகிறது. உடுமலை அருகே கல்லாபுரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. கல்லாபுரம் ராஜ வாய்க் கால் பாசனம் மூலம் 1,000க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன. கல்லாபுரம் பகுதிக்கு அமராவதி அணையில் இருந்து 10 மாதங்களுக்கு பாசனத்துக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. போதிய அளவு தண்ணீர் கிடைப்பதால், விவசாயிகள் மற்ற பயிர் சாகுபடியை விட, நெற் பயிர் சாகுபடி செய்ய அதிகளவு ஆர்வம் காட்டு கின்றனர்.

பழைய ஆயக்கட்டு பாசனத்தில் குறுவை, சம்பா என ஆண்டுக்கு இரண்டு பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ளப் படுகிறது. ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ற வகையில், நெல் ரகங்கள் இப் பகுதிகளில் சாகுபடி செய் யப்படுகிறது. போதிய அளவு தண்ணீர் கிடைத்ததால், கடந்தாண்டு நவ., மாதம் இரண்டாம் போக நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. தற்போது, அமராவதி அணை நீர் மட்டம் வெகுவாக குறைந்து வரு வதால், நெல் பயிர்களுக்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்கா மல் பாதிக்கும் அபாயம் நிலவு கிறது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: கல்லாபுரம் மற்றும் சுற்றுப் பகுதிகளில், பல ஆண்டுகளாக ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப் படுகிறது. ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஒப்பந்த அடிப் படையில் கூலி வழங்கப் படுகிறது. நெல் நடவு செய்த மாதத்தில் இருந்து மூன்று மாதங்களுக்கு பின் அறு வடை நடைபெறும். ஆண்டு தோறும் அறுவடை செய்யப்படும் நெல் வியாபாரிகள் மூலமாக தாரா புரம், கரூர், கேரளா உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனை செய்யப் படுகிறது. இந்நிலையில், கடந்த நவ., மாதம் போதிய அளவு தண்ணீர் இருந்ததால், நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால், அமராவதி அணையின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருவதால், போதிய அளவு தண்ணீர் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாகியுள்ளது. தற்போது, 130 நாட்கள் பயிரான நெல் பால் பிடிக்கும் தருணத்தில் உள்ளது. நெற்பயிர்களுக்கு 20 நாட் களுக்கு மேல் தண்ணீர் வேண்டும். ஆனால், அமராவதி அணை நீர் மட்டம் குறைந்ததால், போதிய தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நெற்பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காவிட்டால், கருகும் அபாயம் உள்ளது. ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து சாகுபடி செய்த நெற்பயிர்கள், அறுவடை தருணத் தில் போதிய தண்ணீர் கிடைக் காமல், மகசூல் பாதித்து நஷ்டம் ஏற்படும். இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***பஞ்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்ய "தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்'' மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவன தலைவர் பேச்சு***

*கோவை,மார்ச்.9–*

*பஞ்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்ய தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவன தலைவர் கோபாலகிருஷ்ணன் கூறினார்.*

*கலந்துரையாடல் நிகழ்ச்சி*

*கோவை மாவட்ட மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பொதிகை தமிழ் தொலைக்காட்சி நிலையம் சார்பில், மத்திய பருத்தி விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வடபுதூர், அல்லபாளையம், கஞ்சம்பள்ளி, வடக்கிபாளையம், வழுக்குப்பாறை ஆகிய கிராமங்களில் இருந்து 100–க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளும், விவசாயிகளும் பங்கேற்றனர்.*

*நிகழ்ச்சிக்கு, மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவன தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*நம் நாட்டில் பருத்தியானது ஏறக்குறைய 1 கோடி ஹெக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்டு, பருத்தி சாகுபடி பரப்பளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. 3 கோடி பேல் பருத்தி உற்பத்தி செய்து, சீனாவுக்கு அடுத்தபடியாக 2–ம் இடத்தில் நம் நாடு உள்ளது.*

*பருத்தி உற்பத்தி*

*தமிழ்நாட்டில் இந்த பயிரானது சராசரியாக 1 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு 5 லட்சம் பேல்கள் உற்பத்தியாகி வருகிறது. ஆனால், தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகளுக்கு தேவைப்படும் 90 லட்சம் பேல்களின் தேவையை பூர்த்தி செய்ய தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம்.*

*இவ்வாறு கோபாலகிருஷ்ணன் கூறினார்.*

*தொடர்ந்து விஞ்ஞானிகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் விவசாயிகள் பருத்தியில் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள், பி.டி. பருத்தியில் புகழிட பயிரை பயிரிடும் முறைகள், சொட்டு நீர் பாசனம் செய்தல், ஊடுபயிர்கள் பயிரிடும் முறைகள், உரமிடுதல், களை நிர்வாகம், பருத்தி மாசுபாட்டை தவிர்க்கும் முறைகள் குறித்து விவசாயிகள், விஞ்ஞானிகளிடம் கேள்விகள் கேட்டனர்.*

*தொழில்நுட்பங்கள்*

*பருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றி விஞ்ஞானிகள் செயல்முறை விளக்கம் அளித்தார்கள். நிகழ்ச்சியில் பொதிகை தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சி தொகுப்பாளர் ஆறுமுகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

## *பிப்ரவரி மாதத்திற்கான மதிப்பீடு சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 34% குறையும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*சென்ற பிப்ரவரி மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 34 சதவீதம் குறைந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2009–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நம் நாட்டிலிருந்து 3.81 லட்சம் டன் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, நடப்பு ஆண்டு பிப்ரவரியில் 2.50 லட்சம் டன்னாக சரிவடைந்திருக்கும் என சோயாபீன் பதப்படுத்துவோர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.*

*விவசாயிகள் கூடுதல் விலையை எதிர்பார்த்து அதிக அளவு சோயா புண்ணாக்கை கைவசம் வைத்துள்ளனர். இதனால் உள்நாட்டிலுள்ள மண்டிகளுக்கு புண்ணாக்கு வரத்து மிகவும் குறைந்துள்ளது. அதே சமயம் சர்வதேச சந்தையில் இதற்கான தேவைப்பாடு கணிசமாக சரிவடைந்துள்ளது. இதன் காரணமாகவே ஏற்றுமதியில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.*

*ஜப்பான்*

*வியட்நாம், ஜப்பான், இந்தோனேஷியா, தாய்லாந்து மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் சோயா புண்ணாக்கை இறக்குமதி செய்து வருகின்றன. இந்நாடுகளில் சோயா புண்ணாக்கிற்கான தேவை உயர்ந்து வருகிறது. அர்ஜென்டினா நாட்டின் சோயாபீன் உலக சந்தைக்கு வர தாமதாகும் என்பதால் இந்த நாடுகள் இந்தியாவிலிருந்து சோயா புண்ணாக்கை அதிகம் வாங்க வாய்ப்புள்ளது. எனவே நடப்பு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*சோயா பருவம்*

*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு சோயா பருவத்தின் (அக்டோபர்–செப்டம்பர்) முதல் நான்கு மாதங்களில் (அக்டோபர் – ஜனவரி) சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 11.15 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில் 19.77 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, நடப்பு பருவத்தின் முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதி 44 சதவீதம் குறைந்து போயுள்ளது.*

*எனினும் நடப்பு முழு பருவத்தில் நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 9 சதவீதம் அதிகரித்து 35 லட்சம் டன்னை எட்டும் என ராஜேஷ் அகர்வால் நம்பிக்கை தெரிவித்தார். இது, சென்ற பருவத்தில் 32.12 லட்சம் டன்னாக இருந்தது. நடப்பு பருவத்தில் உள்நாட்டில் 1.02 கோடி டன் சோயாபீன் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற பருவத்தில் 99 லட்சம் டன்னாக இருந்தது.*

## லாரி வாடகையை உயர்த்துவது குறித்து காய்கறி வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கியது காய்கறி விலை அதிகரிக்க வாய்ப்பு

*சென்னை, மார்ச்.9–*

*லாரி வாடகையை உயர்த்துவது குறித்து காய்கறி வியாபாரிகளுடன், லாரி உரிமையாளர்கள் பேச்சு வார்தையை தொடங்கியுள்ளனர். லாரி வாடகை உயர்த்தப்பட்டால் காய்கறி விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.*

*பெட்ரோல்–டீசல் விலை உயர்வு*

*மத்திய பட்ஜெட்டில் பெட்ரோல்–டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மும்பையில் உள்ள தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் சரக்கு கட்டணத்தை 15 சதவீதமாக உயர்த்தியுள்ளனர். இதுபோல டெல்லி, தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களில் உள்ள தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் சரக்கு கட்டணத்தை 15 முதல் 20 சதவீதம் உயர்த்தி விட்டனர். அகில இந்திய மோட்டார் காங்கிரஸ் நிறுவனத்தின் அவசர கூட்டத்தில் இந்த முடிவை எடுத்துள்ளனர்.*

*லாரி வாடகை உயர்வால் உப்பு முதல் சிமெண்ட் வரை அனைத்து பொருட்களின் விலையும் விரைவில் உயரும் என்று வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள். இந்தியாவில் மும்பையில் இருந்து டெல்லிக்கு அதிக அளவில்*

*சரக்குபோக்குவரத்து உள்ளது. மும்பையில் இருந்து டெல்லிக்கு முன்பு லாரி வாடகை ரூ.20 ஆயிரமாக இருந்தது, தற்போது பெட்ரோல்–டீசல் விலை உயர்த்திய பிறகு லாரி வாடகை ரூ.23 ஆயிரமாக உயந்துள்ளது.*

*டீசல் விலை உயர்வு ஒவ்வொரு மாநிலத்திற்கும் மாறுபட்டு உள்ளது. அதாவது டெல்லியில் ஒரு லிட்டர் டீசல் 35 ரூபாய் 47 காசும், கொல்கத்தாவில் ஒரு லிட்டர் டீசல் 37 ரூபாய் 73 பைசாவும், சென்னையில் ஒரு லிட்டர் டீசல் 37 ரூபாய் 78 பைசாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது.*

*வெளிமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு காய்கறிகள் ஏற்றிவரும் லாரி வாடகை இதுவரை உயர்த்தப்படவில்லை. லாரி வாடகையை உயர்த்துவது பற்றி காய்கறி வியாபாரிகளுடன் லாரி உரிமையாளர்கள் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளனர்.*

*இந்த பேச்சுவார்த்தை முடிந்ததும் இன்னும் இரண்டு அல்லது 3 நாட்களில் காய்கறி லாரிகளுக்கான லாரி வாடகை உயர்வு பற்றிய அறிவிப்பை வெளியிட உள்ளனர். கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்துதான் காய்கறிகளை ஏற்றிக்கொண்டு அதிக அளவில் லாரிகள் வருகிறது. பெங்களூரில் இருந்து கோயம்பேடுக்கு லாரி வாடகை ரூ.12 ஆயிரமாக இருந்தது, டீசல் விலை உயர்வுக்கு பிறகு ரூ.14 ஆயிரமாகவும், ஆந்திராவில் இருந்து கோயம்பேடுக்கு லாரிவாடகை ரூ.15 ஆயிரமாக இருந்தது, ரூ.18 ஆயிரமாகவும், மராட்டியத்தில் இருந்து கோயம்பேடுக்கு லாரிவாடகை ரூ.23 ஆயிரமாக இருந்தது, ரூ.26 ஆயிரமாகவும் உயர்த்த லாரி அதிபர்கள் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.*

*சிறு பாகற்காய் சீசன்*

*தற்போது பீன்ஸ் விலை மட்டும் ஒரு கிலோ ரூ.30 ஆக உயர்ந்துள்ளது. தக்காளி, காலிபிளவர், கோஸ் உள்பட அனைத்து காய்கறிகளும் விலை குறைவாக உள்ளது. லாரி வாடகை உயர்த்தப்பட்ட பின்பு காய்கறி விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை உயரும் என்று கோயம்பேடு மொத்த வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.*

*பெட்ரோல்–டீசல் விலையை உயர்த்தினாலும் சரி, லாரி வாடகையை உயர்த்தினாலும் சரி பாதிக்கப்போவது லாரி அதிபர்களோ, வியாபாரிகளோ அல்ல. அனைத்து பாதிப்புகளும் கடைசியில் பொதுமக்கள் தலையில்தான் விழுகிறது என்று அரசு ஊழியர் ஒருவர் மிகவும் வருத்தத்துடன் கூறினார்.*

*கடந்த 2 மாதத்திற்கு முன்பு ஒரு கிலோ சிறுபாகற்காய் 60 முதல் ரூ.80 வரை விற்பனையானது. தற்போது சிறு பாகற்காய் சீசன் என்பதால் இதன் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் ஒரு கிலோ ரூ.35 முதல் ரூ.40–க்கு விற்பனையாகிறது என்று கொளத்தூர் காய்கறி வியாபாரி பாலமுருகன்* தெரிவித்தார்.